பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு
The EELA NADU

மலர் 19 கார்த்திகை 27 ஜுஹறஜ் 30 இதழ் 302
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 12-12-77

# வடபகுதி கூட்டுறவு ஊழியர்சங்க கூட்டத்தில் அமளி துமளி!

## புதியசங்கம் உதயம்

(யாழ்ப்பாணம்)
அகிலஇலங்கை கூட்டுறவு ஊழியர் சம்மேளனத்திலிருந்து வடபகுதி கூட்டுறவு ஊழியர்கள், பிரிந்துசெல்வதற்கான அங்கீகாரத்தைப் பெறும் கூட்டத்தில் பெரும் அமளி துமளியேற்பட்டு, சுமார் அரைமணி நேரம், ஒரே கூச்சலும், குறுக்கீடுகளும், குழப்பமுமாக இருந்த பின் 'கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்' என்றபுதிய சங்கம் நிறுவப்பட்டது.

இக்கூட்டம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் தலைமையில் நேற்றுக்காலை நடைபெற்றது.

தாய்ச்சங்கம் 3 வருடகாலமாக செயல்படாத காரணத்தினால் வடபகுதி ஊழியர்கள் பிரிந்து, புதிய சங்கம் ஆரம்பிக்கவேண்டும் என்ற அகில இலங்கை கூட்டுறவு ஊழியர் சம்மேளன வட பிராந்திய பொதுச்சபை, கடந்த வருடம் தீர்மானித்திருந்தது. இத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு விசேட பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்த் தொழிற்சங்க கூட்டணிப் பொதுச்செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன்பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டார்.

(6ம் பக்கம் பார்க்க)

லாலா நீல சோப்

லாலா நீல சோப் இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது.

சிறந்த சலவைக்கு
லாலா நீல சோப்

லாலா சோப்
தொழிற்சாலை
அச்சுவேலி



# 'இராசு'வுடன் ஒத்துழைக்க கவிஞர் 'காசி' நிபந்தனை!

[யாழ்ப்பாணம்]
மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரையுடன், மீண்டும் சேர்ந்து ஒத்துழைப்பதற்கு கவிஞர் காசி ஆனந்தன் ஒரு நிபந்தனை விதித்துள்ளார்.

இயக்க வேலையாக நேற்று யாழ்ப்பாணம் வந்த கவிஞர் காசி ஆனந்தன் 'தமிழ் ஈழக் கோரிக்கையை வலுப்படுத்த, பழையவைகளைமறந்து, எல்லாவற்றையும் விட்டுக்கொடுத்து அண்ணன் இராசதுரையுடன் ஒத்துழைக்க தயார்' என்று கூறினார்.

கடந்த தேர்தலைத் தொடர்ந்து, திரு. இராசதுரைக்கும், கவிஞர் காசி ஆனந்தனுக்குமிடையிலுள்ள, இடைவெளியைஅகற்றுவதற்கு, கூட்டணித் தலைவர்கள்சிலர் முயன்று வருகின்றார்கள். உள்ளூராட்சி மன்ற தேர்தல் வருவதே இதற்குக்காரணம் எனக் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட்டணி உள்ளூராட்சி மன்றத்தேர்தல்களில்,போட்டியிடுவதற்கு இவர்களின் இணைப்பு அவசியம் எனக் கூட்டணி வட்டாரங்களில் கருதப்படுகிறது.

தற்பொழுது திரு. இராசதுரை, இந்தியாவிற்குச் சென்றுள்ளார். அவர் நாடுதிரும்பியதும், இந்த இணைப்பு முயற்சி நடைபெறவிருக்கிறதாகத் தெரிகிறது.



''அண்ணன் இராசதுரையுடன் ஒத்துழைப்பதற்கு,

அவர் மூன்று அம்சங்களைக் கொண்ட அறிக்கையொன்றை வெளியிடவேண்டும் என்று கவிஞர் காசிஆனந்தன் நிபந்தனை விதித்தார்.

'முதலாவதாக, திரு இராசதுரைக்கு கிடைத்த வாக்குகள் கூட்டணிக்கு கிடைத்த வாக்குகளல்ல. தனிப்பட்ட வாக்குகள் என அமைச்சர் தேவநாயகம் கூறியுள்ளதை அண்ணன் இராசதுரைமறுத்து தனக்கு கிடைத்த வாக்குகள் கூட்டணிக்குகிடைத்த வாக்குகளே என்று கூறவேண்டும்'

'இரண்டாவதாக, கொள்கை அடிப்படையில், கூட்டணி வேட்பாளராக, உறுதியளித்துப்போட்டியிட்ட திரு. கனகரத்தினத்தின் நிலைமைகுறித்து வேதனையடைவதாகவும்,அவர் கூட்டணிக்கு,துரோகம்செய்துவிட்டதாகவும், பிரதமரைத் தலைவராக ஏற்கவேண்டும் என அவர் கூறியது வேதனையளிப்பதாகவும், அண்ணன் இராசதுரை அறிவிக்கவேண்டும்.

6-ம் பக்கம் பார்க்க)

# விஜயவீரா இன்று யாழ். வருகிருர்

(கொழும்பு)
ஜனதா விமுக்திப் பெரமுனத் தலைவரும் அண்மையில் விடுதலை செய்யப்பட்டவருமான திரு ரோகண விஜயவீரர இன்று காலை யாழ்ப்பாணம் வருகிருர்.

யாழ்ப்பாணத்தில் திரு விஜயவீரா தமிழர் கூட்டணித் தலைவர்களுடன் எதிர்கால அரசியல் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என்று தெரிகிறது,

ஜனதா விமுக்தி பெரமுன ஆதரவாளர்களால் நடத்தப்படும் கூட்டங்களிலும் திரு விஜயவீரா கலந்து கொண்டு உரைநிகழ்த்துவார்.

இவருடன் திரு. பாலாதம்புவும் யாழ் வருவார். (ம-இ)

# 'யாழ் - கொழும்பு தொலைபேசி சீர்கேடு'

## பேரவையில் நல்லூர் எம். பி.

(கொழும்பு)
யாழ் - கொழும்பு தொலைபேசிச்சேவை சீரற்றநிலையில் இருக்கிறது உலக நாடுகளின் தலைநகரில் உள்ளவர்களோடு கூட சிலநிமிடங்களில் தொலைபேசியில் தொடர்புகொண்டு விடலாம். ஆனல் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொள்வதற்காக நீண்ட நேரம் காத்திருக்கவேண்டி உள்ளது.

இவ்வாறு நல்லூர் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு எம். சிவசிதம்பரம் தேசிய அரசுப் பேரவையில் கூறினர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு தொலைபேசியில் நீண்டநேரம் காத்திருந்தபின் பேசச்சந்தர்ப்பம் கிடைத்தாலும் உரத்த குரலிலேயே பேசவேண்டிஉள்ளது. இவ்வாறு உரத்த குரலில் பேசுவது சில வேளை யாழ்ப்பாணத்திற்கே தொலைபேசியின்றி கேட்டுவிடும் என்றும் திரு சிவசிதம்பரம் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

1921ம் ஆண்டு 6 உபதபால் கந்தோர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட தபால் சேவை இப்போது 2075 உபதபால் கந்தோர்களுடனும், 325 தபாற் கந்தோர்களுடனும் இயங்கி வருகிறது

(6 ம் பக்கம் பார்க்க)

புதிய பங்கீட்டு முறை.

# குறைநிரப்பு படிவங்கள் இன்று முதல் விநியோகம்

[யாழ்ப்பாணம்]
யாழ். மாவட்டத்தில் அரசின் புதிய பங்கீட்டு உணவு விநியோகம் தொடர்பாக குடியிருப்பாளர்களிடமிருந்து வருமான விபரங்களைச் சேகரிப்பதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகள் தத்தமது பகுதி உதவி அரசாங்க அதிபர்களைச் சந்திக்குமாறு யாழ் அரசாங்க அதிபரும் பிரதி உணவு ஆணையாளருமான திரு டபிள்யு. ஏ. எல். விஜயபாலா பணித்துள்ளார்

இந்த அதிகாரிகளுக்கான விசேட நடைமுறை வகுப்பு இன்று காலை உதவி அரசாங்க அதிபர்களின் அலுவலகத்தில் நடைபெறும் யாழ் மாவட்டத்தில் உள்ள 16 உதவி அரசாங்க அதிபர்களின் காரியாலயங்களில் இந்த வகுப்பு நடைபெறும்.

இந்த அதிகாரிகள் இன்று முதல் இம்மாதம் 18-ம் திகதி வரைத் தமக்கு ஒதுக்கப்பட்ட கூட்டுறவுக் கடைகளிலும் உத்தரவு பெற்ற வியாபார நிலைங்களிலும் இருந்து குடியிருப்பாளருக்கு குறை நிரப்பு அட்டவணைகளை விநியோகிப்பர்.

இக்குறைநிரப்பு அட்டவணைகளை ஒருவார காலத்திற்குள் பூர்த்தி செய்து இம்மாதம் 19-ம் திகதி முதல் 26-ம் திகதிவரை தாம் பெற்ற இடத்திலேயே குடியிருப்பாளர்கள் திருப்பி ஒப்படைக்க வேண்டும்.

கூப்பன்களை எவரும் கூட்டுறவுக் கடைகளில் ஒப்படைக்கத் தேவையில்லை. (இ)

## அடையாள அணிவகுப்பு

]யாழ்ப்பாணப்]
யாழ்ப்பாணப் பகுதியில் அண்மையில் நடைபெற்ற கொள்ளைகள் தொடர்பான அடையாளஅணிவகுப்பு இன்று நீதிமன்றத்தில் நடைபெறவிருக்கிறது. [*]

## வசதிக்கேற்ப பாடசாலை நாட்கள்

[கொழும்பு]
அரசாங்கப் பாடசாலைகளின் ஆரம்ப நேரத்தையும், தவணை விடுமுறை நாட்களையும் வசதிக்கேற்றவாறு வைத்துக்கொள்ளுவதற்கு பாடசாலைகளுக்கு அனுமதி வழங்குவதென்று கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பெற்ருேர்-ஆசிரியர் சங்கங்களின் வேண்டுகோளின் பேரிலேயே கல்வி அமைச்சர் இவ்வாறு முடிவுசெய்துள்ளார்.

கல்விநேரம் பாதிக்கப்படாமலும் பாடசாலை நாட்களின் மொத்த எண்ணிக்கையில் பாதிப்பு ஏற்படாமலும்வசதிக்கேற்றவாறு இவற்றை மாற்றிக்கொள்ளலாமென்றுகல்வி அமைச்சு அறிவித்துள்ளது (ஆ)

விவசாயிகளே,

★ இலங்கையின் உரயாக்க கூட்டுஸ்தாபன விநியோகஸ்தர்களாக நாம் நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.
★ உங்களுக்குத் தேவையான உரவகைகளுக்கு எந்நேரமும் எம்மை நாடுங்கள்.

எஸ். வி. முருகேசு

நம். 154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தந்தி: எஸ். வி. எம். 7901
தொலைபேசி: 564

மாவட்ட மந்திரிப் பதவி ஏற்கலாமா?

# ‘சிங்களக் குடியேற்றத்தை தடுத்து நிறுத்த உதவும்’

## முன்னாள் அரசியல் அதிகாரியின் செயலாளர் திரு. இராசையா கருத்து

கடந்த அரசாங்கத்தின் போது யாழ்ப்பாண மாவட்ட அரசியல் அதிகாரி திரு. கி. அருளம்பலத்தின் செயலரவராகக் கடமையாற்றிய திரு. எல். இராசையா கூறியதாவது: திருநெல்வேலியில் 50 ஏக்கர் நிலத்தில் முன்னாள் காணி விவசாய அமைச்சரின் பணிப்புரையின்பேரில் முன்னாள் அரசாங்க அதிபர் சிங்களக் குடியேற்றம் செய்ய முயற்சித்தபோது அரசியல் அதிகாரியினால்தான் அதைத் தடுத்து நிறுத்த முடிந்தது. சட்ட மூலம் எவ்வித அதிகாரமும் பெற்றிருக்காத அரசியல் அதிகாரியினால் தமிழ்ப் பகுதியில் சிங்களக் குடியேற்றத்தை தடுத்து நிறுத்த முடியுமானால் சட்டமூலம் அதிகாரங்களைப் பெற்ற மாவட்ட மந்திரிகளின் தமிழ்ப்பிரதேசங்களை சிங்களக் குடியேற்றத்திலிருந்து கூடியளவு தடுத்து நிறுத்த முடியும்.

### தமிழர் ஆதிக்கம்

சட்டரீதியான அதிகாரங்களை உள்ளடக்கிய மாவட்ட மாவட்ட மந்திரி பதவிகளைப் பெறுவது தமிழ் மாவட்டங்களை முன்னேற்றுவதற்கும், குடியேற்றத்தில் தமிழர் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கும் உதவியாக இருக்கும்.

தற்போதைய அரசு மாவட்ட அடிப்படையில் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஏற்படுத்தப்பட்ட அரசியல் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தப்படி மாவட்ட மந்திரி பதவி நியமனம் செய்யப்படவிருக்கிறது.

மாவட்ட மந்திரி நியமனம் முன்னோடி அரசியல் அதிகாரி என்று கூறுவது சாலப்பொருத்தமாகும்.

முன்னைய அரசினால் நியமிக்கப்பட்ட அரசியல் அதிகாரிகள், பிரதம மந்திரியின் நியமனங்களாகவே இருந்தன. அவர்களுக்கு ஒரு அரசியல் சட்டரீதியான அதிகாரங்களோ, வேதனமோ, வேறு சலுகையோ இருக்கவில்லை.

தற்போதைய மாவட்ட மந்திரி அரசியல் சட்டத்திற்கு அமையவும், நியமனத்திற்குரிய வேதனம், வாகனம், மற்றும் பல வசதிகளுடன் நியமிக்கப்படவிருக்கிறார்கள்.

இவர்களின் அதிகாரம் எவையென இதுவரை வரையறுத்துக் கூறப்படாத விஷயம். தற்போது அரசாங்க அதிபர் வசமுள்ள அதிகாரம் அனைத்தும் மாவட்ட மந்திரிக்கு வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி அரசாங்க அதிபர் மாவட்ட மந்திரியின் தீர்மானங்களை செயல்படுத்தும் (செயலாளர்) அதிகாரிகளாகவே கடமையாற்றுவார்கள். இது முன்னைய ஏற்பாட்டைவிட நடைமுறைக்குச் சாத்தியமானதாகவும், அதிகார ரீதியில் கூடுதல் அதிகாரங்களை தன்னகத்தே கொண்ட திட்டமாகவும் விளங்குகிறது.

### கூடுதல் அதிகாரம்

முன்னைய அரசியல் அதிகாரிகள், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டப் பணத் தொகையை மாவட்டரீதியாக தொகுதிகளுக்குப் பிரித்துக் கொடுத்தது தெரிந்ததே. தொகுதிகளில் அந்தந்தத் தொகுதி எம். பீக்களின் சிபார்சுகளுக்கமைய பணத்தை ஒதுக்கீடு செய்யும் அதிகாரியாக மாத்திரமே அவர் விளங்கினர். செயல்படுத்தும் அதிகாரம் அனைத்தும் அரசாங்க அதிபரிடமே இருந்தது. அத்துடன் காணி நிர்வாகம், காணி ஒதுக்கீடு, மற்றும் பல அரச திணைக்களங்களின் நிர்வாகம் என்பன அரசியல் அதிகாரி வசம் இருக்கவில்லை.

புதிய நடைமுறைத் திட்டத்தின்கீழ் மாவட்ட நிர்வாகம் அனைத்தையும் மாவட்ட மந்திரியின்கீழ் வரக்கூடும். இதன்படி மாவட்ட மந்திரி, தாம் நிர்வகிக்கும் மாவட்டத்தின் பொருளாதார முன்னேற்றத்தை மாத்திரமன்றி, அரசாங்க நிர்வாக யந்திரத்தை முடுக்கி செயல்படுத்தும் அதிகாரத்தையும் பெற்றவராகின்றார்.

தமிழ்ப்பிரதேசங்களைப் பொறுத்தளவில், பரந்த அளவிலான பொருளாதார முன்னேற்றத்திற்கும் மற்றும் பரந்த அளவிலான நிர்வாக இயக்குதலுக்கும் இது உதவுகின்றது.

மாவட்ட மந்திரிக்குப் பின்வரும் அதிகாரங்கள் கிடைக்குமாயின், அம்மாவட்ட மந்திரி பொறுப்பை தமிழ்த் தலைவர்கள் ஏற்பது எவ்வகையிலும் சிறந்ததாகும்,

1. காணி நிர்வாகம். பங்கீடு, குடியேற்றம்.
2. மாவட்ட அனைத்து திணைக்கள, கூட்டுத்தாபன நிர்வாகம், மத்திய கடைநிலை நியமனங்கள், பதவி உயர்வு, இடமாற்றம்.
3. மாவட்டத்தில் அமைந்த அனைத்து அரசாங்க திணைக்கள, கூட்டுத்தாபன, யாக்கங்கள் ஆகியவற்றில் நிர்வாகப் பொறுப்பு.

மேற்கண்ட அதிகாரங்கள் அனைத்தும் ஒருங்கே பெற்ற மாவட்ட மந்திரி பதவிகள் தன்னிச்சையாகவோ, அன்றேல் அந்தந்த மாவட்ட எம். பீக்களின் கூட்டுப்பொறுப்புடனோ, மத்திய அரசின் எவ்வித தலையீடுமின்றி செயலாற்ற அதிகாரம் கிடைக்குமாயின், பொதுவாக எல்லா மாவட்டங்களுக்கும் குறிப்பாக தமிழ்ப்பிரதேசங்களுக்கு பெரும் வரப்பிரசாதமாகும்.

முன்னாள் அரசியல் அதிகாரி

[5-ம் பக்கம் பார்க்க]


## வரி விளம்பரம்

### தேவை

ரோரு மோட்டார் வாகன சேவிஸ் நிலயத்திற்கு சேவிஸ் நிலைய அனுபவமுள்ளவர்களும் சேவிஸ் நிலையத்தில் வேலைபழக விரும்புவோர்களும் 19-12-77-க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். முகாமை இயக்குனர், தரோரு லிமிட்டெட், 32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 7895

பழங்கள் பதனிடும் தொழிற்சாலையில் வேலைசெய்ய பெண் தொழிலாளர் தேவை. நேரில் மனுச்செய்க. அரஸ்கோ இன்டஸ்றீஸ், 163, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 7900

### விற்பனைக்கு

கிளிநொச்சி உருத்திரபுரம், றோட்டில் 8-ம் வாய்க்கால் 5 சந்தியில், கிணறும், தென்னைமா முதலியவற்றுடன் கால் ஏக்கர் காணிவிற்பனைக்குண்டு. கடை, மில் கட்டக்கூடிய இடம் விபரங்களுக்கு: 48/82 இராசாவின்தோட்டம் றோட், யாழ்ப்பாணம். 7894

### அறிவித்தல்



நேற்றையதினம், காணவில்லையென பிரசுரமாகிய செல்வன் சிவகடாட்சம் லக்ஷ்மன் தவறுதலாக, இன்னொருவரால் கடத்திச்செல்லப்பட்டு மீண்டும் இல்லம் திரும்பியுள்ளார். இதனால் எமது உறவினர், நண்பர்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துகின்றோம்.

திரு. திருமதி
சிவகடாட்சம்

7902


## சுன்னாகம் பட்டணசபை

## கேள்விப்பத்திர அறிவித்தல் 1978

சுன்னாகம் மீன்சந்தையில் 01-01-1978 தொடக்கம் 31-12-1978 வரையிலான காலப்பகுதியில், கீழ்க்காணும் குத்தகைகளுக்கான கேள்விகள் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23-ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி வரையும் விசேட ஆணையாளரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரம் கீழ் குறிப்பிடப்படும் விபரங்களின்படி பிணைப்பணமும், கேள்விப்பத்திரப்பணமும் செலுத்தி 22-12-1977-ந் திகதி பிற்பகல் 2-30 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில், அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்:

| கடை இல. | வியாபாரத்தின் தன்மை | பிணைப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் |
| --- | --- | --- | --- |
| மீ 1 | மாட்டிறைச்சிக்கடை | 250/- | 10/- |
| மீ 7 | ஆட்டிறைச்சிக்கடை | 150/- | 10/- |

இ. இராமலிங்கம்,
விசேட ஆணையாளர்,
பட்டணசபை,
சுன்னாகம்.

பட்டணசபை அலுவலகம்,
சுன்னாகம்,
09-12-1977.

7887

## பிஸ்கால் விற்பனை

மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம்

கந்தன் முத்தையா
தோப்புக்காடு, காரைநகர்.

வழக்காளி

எதிராக

வழக்கு இலக்கம்:
காசு/3972

ஐயம்பிள்ளை செல்லத்துரை,
தோப்புக்காடு, காரைநகர்.

எதிராளி

மேற்சொல்லப்பட்ட எதிராளியிடமிருந்து வெலியாத்தில் விபரிக்கப்பட்ட தொகைப்பணம் ரூபா 3689/-க்கு ரூபா 3000/-க்கு 20-2-71 தொடக்கம் 5-5-71 வரையும் 12% வட்டியும் அதன் பின் கடன் முழுத்தொகையும் கொடுக்கும் வரை 5% வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 303 சதம் 45மும் பிஸ்கால் செலவும் பவுண்டேச்சும் அறவாக்குவதற்காக கீழே விபரிக்கப்படும் ஆதனத்தின் சகல உரித்துக்களையும் 1978-ம் ஆண்டு தை மாதம் 4-ந் திகதி புதன்கிழமை காலை 10-00 மணிக்கு சொல்லப்பட்ட ஆதனத்தில் இருந்து பகிரங்க ஏலத்தில் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிஸ்காலால் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி, ஊர்காவற்றுறை கோவிற்பற்று கரம்பன் இறை "ஆண்டான் திடலும் ஆலடியிற்பள்ளமும்" நிலப்பரப்பு இரண்டும் (2) வீடும் குசினியும் மலசலகூடமும், கடைக்கட்டிடமும், தென்னையும், வடக்கெல்லையிலிருக்கும் கிணற்றில் அரைவாசியும், இதன் எல்லைகள்: கிழக்கு: ஒழுங்கை, வடக்கு: கந்தசாமி பெண் பூமணியினுதனம், மேற்கு: கதிரேசு கைம்பெண் தங்கமுத்துவினுதனம், நாகமுத்து தம்பிப்பிள்ளையினுதனம், தெற்கு: தெரு இதடங்கலும்.

மூ. பத்மநாதன்,
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்,
9-12-77.

7889

## கேள்வி அறிவித்தல்

### சுன்னாகம் பட்டணசபை

### சுன்னாகம் சந்தைக் கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமை

01-01-1978 தொடக்கம் 31-12-1982 வரையிலான ஐந்து வருடங்களுக்கு சுன்னாகம் சந்தைக்கு கிழக்குப் பக்கமாக சேர் பொன். இராமநாதன் வீதியில் அமைந்திருக்கும் சந்தைக்கடை இலக்கங்கள் 2, 3, 4 கொண்ட கடைகளில் வியாபாரம் செய்யும் உரிமைக்கான கேள்விகள், இலங்கைப் பிரசைகளிடமிருந்து 23-12-1977 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி வரையும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு கடைக்குமுரிய மாதாந்த வாடகை ரூபா 150/- ஆகும்.

கேள்விப்பத்திரங்கள், விண்ணப்பத்தின் பேரில், 22-12-1977 பி. ப. 2-30 வரையும் சுன்னாகம் பட்டணசபை விசேட ஆணையாளரிடமிருந்து பெறப்படும் படிவங்களிலேயே சமர்ப்பித்தல் வேண்டும்.

ஒரு கேள்விப் படிவத்தின் கட்டணமாக ரூ. 10/-, கேள்விப்பிணைப்பணமாக ரூ. 250/-ம் காசாகவோ அல்லது காசுக்கட்டளையாகவோ, பட்டணசபை அலுவலகத்தில் செலுத்தி கேள்விப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளல்வேண்டும்.

எந்தவொரு கேள்வியையும் ஏற்றுக்கொள்வதற்கோ அல்லது நிராகரிப்பதற்கோ விசேட ஆணையாளருக்குப் பூரண அதிகாரமுண்டு.

கேள்வி நிபந்தனைகளையும், மற்றும் விபரங்களையும் சுன்னாகம் பட்டணசபை விசேட ஆணையாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இ. இராமலிங்கம்
விசேட ஆணையாளர்,
பட்டணசபை சுன்னாகம்.

பட்டணசபை அலுவலகம்,
சுன்னாகம்.
05-12-1977.

7888

காங்கேசனில்

## 52கோஷ்டிகள் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை யங்ரூயல் விளையாட்டுக் கழகம் தனது எட்டாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடத்தவிருக்கும் கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வடபகுதியைச் சேர்ந்த 52 கோஷ்டிகள் பங்குபற்றவுள்ளன. கடந்த வருடத்தைவிட இம்முறை பத்துக் கோஷ்டிகள் கூடுதலாகப் பங்குபற்றுகின்றன.

இச்சுற்றுப் போட்டியில் முதலாம் பிரிவில் இருபத்தொன்பது கோஷ்டிகளும், இரண்டாம் பிரிவில் பதினைந்து கோஷ்டிகளும் மூன்றும் பிரிவில் எட்டுக் கோஷ்டிகளும் பங்குபற்றியுள்ளன. வடபகுதியைச் சேர்ந்த சிறந்த விளையாட்டுக் கழகங்கள் பல இம்முறை இச்சுற்றுப்போட்டியில் கலந்துகொள்கின்றன.

சுற்றுப்போட்டி இம்மாதம் 25ம் திகதி காங்கேசன்துறைப் பட்டினசபை மைதானத்தில் ஆரம்பமாகின்றது. வடமாகாண மத்தியஸ்தர் சங்க நடுநிலையாளர்கள் இப்போட்டிகளுக்கு உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றுவர். இச்சுற்றுப்போட்டியில் வெற்றிபெறும் கோஷ்டிகளுக்கு ஆறு வெற்றிக் கிண்ணங்களும் எட்டு வெற்றிக் கேடயங்களும் பரிசில்களாக வழங்கப்படவிருக்கின்றன. இறுதிப் போட்டிகள் எதிர்வரும் சித்திரை வருட தினத்தன்று நடைபெறும். சுற்றுப் போட்டிகள் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும். போட்டிகளுக்கான ஒழுங்குகளை மேற்படி சங்கக் காரியதரிசி திரு. கே. தனபாலசிங்கம் செய்துள்ளார். (அ)

ம. கி. பிரச்னை:

# சதாத்துக்கு எதிராக அரபு முன்னணி திரட்டுகிறார் சிரிய அதிபர்

லண்டன், டிச. 11

மத்தியகிழக்குப் பிரச்னை தொடர்பாக எகிப்திய அதிபர் அன்வர் சதாத்தின் சமரச முயற்சிகளுக்கு அமெரிக்க ஆதரவளிக்க முன்வந்துள்ள அதே வேளையில் சதாத்திற்கு எதிராக பரவலான அரபு முன்னணி ஒன்றைத் திரட்டுவதில் சிரியா அதிபர் ஈடுபட்டுள்ளார்.

ம. கி. பிரச்னை சமரச முயற்சியின் 2-வது கட்டமாக அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. சைரஸ்வர்ன்ஸ் இஸ்ரேல் சென்றுள்ளார்.

எகிப்திய அதிபரின் நேரடி சமரச முயற்சிகளை அமெரிக்கா வரவேற்கிறது என்று அவர் தெரிவித்தார்.

ம. கி. பிரச்னை சுமுகமாகத் தீர்வதற்கு அமெரிக்கா சகல விதத்திலும் உதவும் என்று அவர் சொன்னார்.

செவ்வாய்க்கிழமை டமாஸ்கஸ் செல்லும் திரு. வான்ஸ் நாளை ஜோர்தானுக்கு விஜயம் செய்வார்.

திரு. வான்ஸ் சவூதி அரேபியாவுக்கும் விஜயம் செய்யவிருக்கிறார்.

இதேவேளை சதாத்தின் சமரச முயற்சிகளுக்கு எதிரான அரபு முன்னணி ஒன்றை உருவாக்குவதில் சிரியா அதிபர் அசாத் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

தமது முயற்சிக்கு ஆதரவு திரட்டும் வகையில் திரு. அசாத் அரபுக்கெதிரான விஜயம் ஒன்றை மேற்கொள்ள விருக்கிறார்.

இது இவ்வாறிருக்க ம. கி. பிரச்னை தொடர்பான ஜெனிவா மாநாட்டை ஒட்டிய கெய்ரோ மகாநாடு ஏற்கனவே அறிவித்தபடி புதன்கிழமை நடைபெறும் என்பதை எகிப்திய அதிபர் உறுதிப்படுத்தினர். (உ)

## அரசு உத்தரவு

புதுடில்லி, டிச 11

மேற்கு வங்காளத்தில் அரசியல் காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்யுமாறு அரசு உத்தரவிட்டுள்ளது. இதில் நகஸலைட்டுகளும் அடங்குவர். (உ)

குளங்கள்

## புனரமைப்பு

(வவனியா)

வவனியாத் தொகுதியில் கடந்த அரசாங்க காலத்தில் குளங்கள், வீதிகள் என்பன சரியான முறையில் புனரமைக்கப்படவில்லையென்று வவனியாத் தொகுதி ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர் திரு. கே. ரி. புலேந்திரன் அமைச்சர் காமினி திசநாயக்காவுக்கு புகார் செய்ததைத் தொடர்ந்து, ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபையில் உள்ள இயந்திரங்கள் வவனியாவுக்கு அனுப்பப்படவிருக்கின்றன.

இத்தகவலை அமைச்சர் திரு. கே. ரி புலேந்திரனுக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார் [உ]

கள்ளக்கடத்தலை ஒழிக்க

## இந்தியாவும் நேபாளமும் ஒப்பந்தம் செய்யும்

புதுடில்லி, சடி 11

கள்ளக்கடத்தலை ஒழிப்பது தொடர்பாக 'ஒப்பந்தம் ஒன்றினை பாரதமும் நேபாளமும் செய்துகொள்ளவிருக்கின்றன.

மூன்றுநாள் விஜயம் ஒன்றினை மேற்கொண்டு நேபாளம் சென்றிருந்த பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் நாடுதிரும்பினர் திரு. தேசாய்க்கு நேபாள மன்னர் பிரேந்திராவும் ராணியும் கடந்த இரவு விருந்துபசாரம் அளித்து கௌரவித்தனர். [உ]

## இவர்களுக்கு நஷ்டஈடு வழங்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரியகடைச் சந்தையில் ஆகஸ்ட் கலவரத்தின்போது எரிந்த கடைகள் கட்டிக் கொடுக்கப்பட்டாலும் மேற்படி கடைகளின் வியாபாரிகள் தொழிலாளர்களுக்கு அவர்கள் வேலை இழந்த நாட்களுக்கும், இழந்த பொருட்களுக்கும் நஷ்டஈடு கோரும் தீர்மானத்தை யாழ்ப்பாணம் பெரிய கடை ஐக்கிய நாணய சங்கம் உள்ளூராட்சி மந்திரிக்கு அனுப்பிவைத்துள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்ப்பாணத் தொகுதிக் கிளைக் கூட்டம் திரு. சி. இராசதுரை தலைமையில் நடைபெற்றபோது இத்தீர்மானத்தை வலியுறுத்தி உள்ளூராட்சி மந்திரிக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது. [கூ-அ]

## நிலத்தை பண்படுத்தும் முயற்சி

ஹைதரபாத், டிச. 11

சமீபத்திய புயலாலும், கடல் கொந்தளிப்பாலும் சேதமுற்ற நிலத்தை பண்படுத்தும் முயற்சி ஆந்திராவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (கூ)

## விவசாயிகளுக்கு நேரடி விவசாய சேவை

(யாழ்ப்பாணம்)

விவசாயப் பயிர்முறைபற்றியும் நோய்த்தடுப்புமுறைபற்றியும் விவசாயிகளுக்கு நேரடி விவசாய இலவச ஆலோசனைகளை விவசாயிகளின் நலன் கருதி யாழ்ப்பாணம் ரோரு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் விவசாயப் பிரிவினர் இலவசமாக வழங்கிவருகின்றனர்.

விவசாய ஆலோசகர்கள் விவசாயபகுதிகளுக்குச் சென்று பல விவசாயப் பரீட்சார்த்த நடவடிக்கைகளை நேற்று முன்தினம் ஆரம்பித்தனர். (அ)

## ஆளை மோதிவிட்டு வான் மறைந்தது

(யாழ்ப்பாணம்)

பாண் வாங்கிக்கொண்டு அல்லைப்பிட்டிக்கு சைக்கிளில் சென்றவரை, பண்ணைப்பாலத்தில் இனந்தெரியாத வான் மோதிவிட்டு விரைந்தோடியது.

நேற்றுமுன்தினம் பகல் 2-30 மணியளவில் இச்சம்பவம் நடந்தது.

அல்லைப்பிட்டியில் கடை வைத்திருக்கும் 19 வயதுடைய எம். அலெக்சாண்டர் என்பவர் 15 ரூத்தல் பாண் வாங்கிக் கொண்டு அல்லைப்பிட்டி நோக்கிச் செல்லும்போது நடைபெற்ற இவ்விபத்தில் சைக்கிள் இருதுண்டுகளாகியதுடன் சைக்கிளில்சென்றவரும் காயமடைந்தார். காயமடைந்தவருக்கு மோதிய வாகனச் சாரதி எந்தவித உதவியும் செய்யாமல் வாகனத்துடன் ஓடிமறைந்துவிட்டார்.

வானால் மோதுண்டவரோடு கூடவந்தவர் அவரை யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதித்தார். (கூ-அ)

மரண தண்டனைச் சட்டம்

## ரத்துச்செய்யக் கோரி ஸ்டொக்ஹோமில் மாநாடு

லண்டன், டிச 11

மரண தண்டனையை ரத்துச் செய்யுமாறு உலகநாடுகளைக் கேட்டுக்கொள்ளும் இரண்டு நாள் மாநாடு ஸ்டொக்ஹோமில் ஆரம்பமாகியுள்ளது.

இம்மாநாட்டை லண்டனில் உள்ள மனித உரிமைகள் ஸ்தாபனம் ஏற்பாடு செய்துள்ளது.

இதேவேளை ஆயுள்தண்டனையை ரத்துச்செய்யவேண்டும் என்று பாரத உயர்நீதிமன்ற நீதிபதி கிருஷ்ணநாயர் கூறியுள்ளார். ]உ]

சல்யூட்-6:

## மனிதரை இறக்கும் முயற்சியில் மீண்டும் ரஷ்யா

மாஸ்கோ, டிச 11

சோவியத் யூனியன் சல்யூட் 6 ஆய்வுகூடத்தில் மனிதர் ஒருவரை இறக்கும் முயற்சியில் மீண்டும் ஈடுபட்டுள்ளது.

சோவியத் யூனியனின் இது தொடர்பான முதல்முயற்சி தோல்வியில் முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ]உ]

உரும்பராய் துப்பாக்கி கொள்ளை:

## 1ம் எதிரி குற்றவாளி; டிச. 23ல் தீர்ப்பு!

2வது எதிரி விடுதலை

(பண்டத்தரிப்பு)

உரும்பராய் துப்பாக்கிக் கொள்ளை வழக்கின் முதலாவது எதிரியை குற்றவாளியாகக் கண்ட மல்லாகம் நீதிபதி தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 23ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

இரண்டாம் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கில் உரும்பராயைச் சேர்ந்த ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியரான செல்லையா நடராசா என்பவரின் வீட்டுக்குள் அத்துமீறிப் பிரவேசித்து அவரைக் கொலைசெய்வதாகப் பயமுறுத்தி அவரின் 750ரூபா பெறுமதியான துவக்கை அபகரித்துச்சென்றதாக உரும்பராய் கிழக்குவாசியான பொன்னுத்துரை வசந்தகுமார், அராலியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் நகுலேஸ்வரன் ஆகிய இரு இளைஞர்கள்மீதும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

நீதிபதி இரண்டாம் எதிரியான நகுலேஸ்வரனின் தந்தையை நீதிமன்றத்துக்கு அழைத்து "இந்த வழக்கில் உமது மகன் விடுதலைசெய்யப்படுவதால் அவர் இக்குற்றத்தைச் செய்யவில்லை என்று அர்த்தமல்ல. உங்கள் சட்டத்தரணி சுட்டிக்காட்டிய சட்டவாதத்தின்படி அவரை விடுதலைசெய்திருக்கிறேன். இளைஞர்களை இப்படித் தவறான வழிகளில் செல்லவிடாது பாதுகாத்துக்கொள்ளவேண்டியது தந்தையின் கடமையும், பொறுப்புமாகும்" என்று புத்திமதி கூறினர். தனது மகனை தகுந்தமுறையில் இனிமேல் பாதுகாத்து வருவதாக தந்தையான சுந்தரலிங்கம் நீதிபதியிடம் தெரிவித்தார். முதலாவது எதிரி சார்பில் சட்டத்தரணிகள் மு. திருநாவுக்கரசு, கே. சிவரத்தினம் ஆகியோரும் இரண்டாவது எதிரி சார்பில் சட்டத்தரணிகள் சிவா பாலேந்திரா, எஸ். சண்முகசுந்தரம் ஆகியோரும் ஆஜராஞர்கள். (இ)

# பாடசாலை நாடகப் போட்டி: ஒரு கண்ணோட்டம்

யாழ். மாவட்டக் கல்லூரிகள், பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற இறுதி நாடகப் போட்டி யாழ். இந்து மகளிர் கல்லூரி அரங்கில் சமீபத்தில் இடம்பெற்றது. கனிஷ்ட பிரிவில் ஏழு நாடகங்களும், சிரேஷ்டபிரிவில் மூன்று நாடகங்களும் இடம்பெற்றன. முதற் பிரிவில் ஒரு பரீட்சார்த்த புதிய நாடகமும், சிரேஷ்ட பிரிவில் பலவேறு உத்திகள் கொண்ட புதிய போக்குநாடகங்களும் முதலிடங்களைப் பெற்றன.

### பரீட்சார்த்த நாடகம்

"புத்திமான் பலவான்" என்ற நாடகம் பழைய கருவை அடியொற்றி எடுத்த நாடகமாய் இருந்தபோதும், நாடக வடிவம் ஒரு புதிய வார்ப்பு. ஓரங்க நாடகமாய் அமைந்த இதன் களம் ஒரு காடு. மரமாக நின்றவர்கள் பன்னிரண்டு மாணவர்கள், பச்சை நிற உடை; கிளைகள்போல் உயர்த்தப்பட்ட கைகள். ஆடவில்லை அசையவில்லை, அற்புதமான காடு அரை நிமிடத்தில் இந்த அமைப்பு. பலவித நடையில் அசைந்த முயல், மான், யானை மற்றும் மிருகங்கள் இதனை வனந்தரம் என உறுதிப்படுத்தி நின்றன.

முக்கிய பாத்திரம் சிங்கம் வருகிறது. கர்ஜனை அதி அற்புதம், குதிரையும் வருகிறது. இவைக்கிடையே உரையாடல் அரசனாக இருக்கச் சிங்கம் வெறுக்கிறது, 'குண்டு' பற்றிய பேச்சு சிங்கத்துக்கு பீதி தருகிறது, நரியாரின் நச்சுப் புத்தி தோல்வி காண்கிறது.

இருபத்தெட்டு நிமிடங்களில் ஒரே களத்தில் ஒரே காட்சியில் நடைபெற்ற இந் நாடகம் ஒரு வெற்றி நாடகம்

சிரேஷ்டபிரிவில் ஓர் அற்புதச் சிருஷ்டி, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் சாதனை நாடக உலகுக்கு ஒரு புதிய தெம்பையூட்டுகிறது. 'புதியதொரு வீடு' இவர்கள் நாடகம், "ஏலே யெலோ தத்தையா ஏலே யெலோ" என்ற ஓலத்துடன் பன்னிரண்டு மாணவர்களின் தோற்றம், அசைவு, எம்மை 'கடற்கரை' என்ற களத்துக்கு இட்டுச் செல்கிறது. நின்ற இடத்தில் நின்றே மீன் பிடிக்கும் காட்சி அற்புதம். சிந்தனைச் சிதறலும் அதையொட்டிய பழைய சம்பவங்களும் மேடையில் இடம்பெறுகின்றன. தூண்டிலால் மீன் பிடிப்பதுபோலச் சைகைமூலம் காட்டப்படும் கட்டம். சிறுவனுடன் சேர்ந்து நடப்பதுபோல ஆனால் ஒரே இடத்திலேயே நிற்கும் நிலை, இடையிடையே கொந்தளிக்கும் கடலைா உக்கிர ஓலங்கள் ஆட்டங்கள் மூலம் காட்டும் பாணி அற்புதமாய் அமைந்துள்ளன.

குழுவாக நடிக்கும்போது அவதானிக்கவேண்டிய ஒழுங்கை, கட்டுப்பாட்டை இந் நாடகத்தில் காண்கிறோம். புதிய உத்திகள் பல எனினும் திறம்படக் கோர்வைப்படுத்தப்பட்டுள்ளது. அபரிமிதமான அக்கறையை தயாரிப்பாளர் பாய்ச்சியுள்ளார்.

சிரேஷ்ட பிரிவில் இடம்பெற்ற வட இந்துமகளிர் கல்லூரியின் கும்பகர்ணனை மையமாய் வைத்து எழுந்த நாடகமும் சிறப்புடன் அமைந்த நாடகமே, அரக்கியர், சீதை, கும்பகர்ணன், இராவணன், விபீஷணன், மண்டோதரி எல்லோருமே சிறப்புற நடித்த போதும். முன்கூட்டியே தெரிந்த கதை புதிய ஆக்கத்துக்கு முன் ஈடுகொடுப்பதில் பின் நிற்கிறது. சிறந்த சுத்தமான நல்ல தயாரிப்பெனலாம்.

கனிஷ்ட பிரிவில் இடம்பெற்ற 'கற்சிப்பி' பற்றிய நாடகமும் தரமான நல்ல சிருஷ்டி ஏனையவை கூடிய அக்கறையுடன் மேடையிடப்பட்டிருப்பின் நல்ல தரத்தை அடைய இடமுண்டு.

—கலைப்பேரரசு ஏ ரி. பொன்னுத்துரை.

## இன்று

(சுழிபுரம்)

வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலய புதிய கட்டிட அடிக்கல்நாட்டு விழா இன்றுபிற்பகல் நடைபெறும்.

வட்டுக்கோட்டைத்தொகுதி தேசியப் பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு அடிக்கல் நாட்டி வைப்பார். இவ் வைபவத்தில் கல்விப்பகுதி உத்தியோகத்தர்கள் பலர் கலந்துகொள்வர். (அ)

# பேரவையில் நிகழ்ந்த சுவையான-சூடான 'வாதம்'

வரவுசெலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதம் தேசிய அரசுப் பேரவையில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

வரவு செலவுத் திட்டம் மீதான விவாதங்கள் ஒருபுறமிருக்க - இவற்ருேடு இன்னொரு விடயமும் சபையில் தற்போது முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கிறது.

முன்னுள் பிரதமரும், அத்தனகலை தொகுதி உறுப்பினருமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவும், அவரது குடும்பத்தினரும் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் காணிநஷ்டஈடு மோசடிகள், இரத்தினக்கல் வியாபாரம் போன்ற சம்பவங்கள் பல சபையில் பலராலும் புதிது புதிதாக பிரஸ்தாபிக்கப்படுகின்றன. அவை சபையில் பரபரப்பைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன!

இருபது வருட பாராளுமன்ற அனுபவத்துடன், பொறுப்பு வாய்ந்த ஓர் அமைச்சராகவும் விளங்கும் தான், பொறுப்பற்றவிதத்தில் சபையை அவமதிக்கும்படியான தகவல்களை சபையில் வெளியிடமாட்டேன் என்றும் தாம் அண்மையில் வெளிநாடு சென்று திரும்பியபோது நகரில் காணப்பட்ட சுவரொட்டிகளில் 'உங்களின் ஈரல்களையா மக்கள் சாப்பிடுவது?' என்ற வாசகம் காணப்பட்டதைக் குறிப்பிட்டு கடந்த அரசாங்கத்தினர் மக்களின் ஈரல்களைச் சாப்பிட்டனர் என்று கூறி, தாம் 30ந் தேதி திருமதி சிறிமாவோவின் காணி நஷ்டஈடு மோசடி பற்றி தெரிவித்தவற்றுக்கான ஆதாரபூர்வமான தஸ்தாவேஜுகள் தம்மிடம் இருப்பதாகவும் கூறி ஆரம்பித்தார் விவசாய, காணி அமைச்சர்.

தாம் முன்னர் குறிப்பிட்டபடி 69 ஆயிரம் ரூபா 6 லட்சத்து ஆயிரமாகியது. ஒரு 'சைபர்' தவறுதலாக இடப்பட்டதால் ஏற்பட்டதல்ல என்று அமைச்சர் கூறினர். அப்போது;

திருமதி சிறிமாவோ: இது பொய்.

திரு. சேனநாயக்கா: கொஞ்சம் பொறுங்கள். இங்கே உங்களின் 'பைல்' இருக்கிறது.

திருமதி சிறிமாவோ: இப்படிப் பொய்யான குற்றச்சாட்டுக்களை இங்கே சுமத்த வேண்டாம். இவற்றுக்காகத் தான் நான் ஒரு கமிஷனை நியமிக்கும்படி பிரதமரைக் கேட்கிறேன்.

திரு. சேனநாயக்கா: நீங்கள் மாத்திரமல்ல குற்றவாளியாகப்போகிறீர்கள். நீங்கள் அமருங்கள்.

திருமதி சிறிமாவோ: என்னை அமரும்படி நீர் கூறமுடியாது. நான் அமரப்போவதில்லை; நான் இதுபற்றி விசாரிக்க ஒரு கமிஷன் நியமிக்கும்படி பிரதமரைக் கேட்கிறேன். நீர் ஏன் என்மீது இப்படி பொய்யான குற்றச்சாட்டைச் சுமத்துகிறீர்?

திரு. ஆர். பிரேமதாசா: [திருமதி சிறிமாவோவைப் பார்த்து] முதலில் அவர் கூறுவதை நீங்கள் கவனியுங்கள்.

திருமதி சிறிமாவோ: அவர் தேவையற்ற ஒரு குற்றச்சாட்டை சுமத்துகிறுர்.

திரு. சேனநாயக்கா: தம் முலகேன தோட்டம் செல்வவரிக்காக மதிப்பிடப்பட்டது; 1969லிருந்து 1672வரை ரூபா 60,000. பின்னர் 4,50,000 ரூபாவுக்கு மீள மதிப்பிடப்பட்டது.

திருமதி சிறிமாவோ: நான் பெற்றேன் என்று நீர்சொன்ன 6 லட்சத்து 90 ஆயிரம் ரூபா எங்கே?

திரு. சேனநாயக்கா: கொஞ்சம் பொறுங்கள்; நான் இன்னும் முடிக்கவில்லை.

"மொன்ரிகாரினி தோட்டம் 1969லிருந்து 1972 வரை ஒரு லட்சம் ரூபா மதிப்பிடப்பட்டது. இது பின்னர் 1975ல் 3 லட்சம் ரூபாவாக மீள மதிப்பிடப்பட்டது! அத்தனகல்ல தோட்டம் 1969 லிருந்து 1972வரை ரூபா 2,69,176 ஆக மதிப்பிடப்பட்டது. பின்னர் 1975ல் ரூபா 8 லட்சமாக மீள மதிப்பிடப்பட்டது. ஹொரகொஸ் தோட்டம் 1969-72 வரை ரூபா 1,84,767 ஆக மதிப்பிடப்பட்டது. பின்னர் 1975ல் 4 லட்சத்து 72 ஆயிரம் ரூபாவாக மீளமதிப்பிடப்பட்டது" என்று கூறிய அமைச்சர்;

"காணிச்சீர்திருத்தச்சட்டத்தின்படி அடிப்படைப் பெறுமதி 1971...72ம் நிதியாண்டுக்கான வருமானம் அல்லது 15 வருட லாபத்தின் ஐந்தில் ஒரு பகுதியாகும். கொடுக்கப்பட்ட லாபத்தை நான் இங்கு சமர்ப்பிக்கமுடியும். அது மிகவும் சுவாரஷ்யமானது" என்றார்.

அமைச்சர் இவ் விபரங்களைக் கூறிக்கொண்டிருந்த போது அரசாங்க உறுப்பினர்கள் "வெட்கம்!, மோசம்!"-என்று கூச்சலிட்டபடியேயிருந்தார். ரப்பர் விளைச்சலைக் கூறிய அமைச்சர்;

'மாலி'

"சபாநாயகர் அவர்களே, நானும் ரப்பர் தோட்டம் வைத்திருக்கிறேன். மாத்தளைப் பகுதியில் நாம் பெற்ற மிகக் குறைந்த உற்பத்தி ஏக்கருக்கு 400 றுத்தல்களாகும்" என்றார்".

அப்போது திருமதி சிறிமாவோ, குறுக்கிட்டு, சபாநாயகர் அவர்களே இக்காணிகள்" என்று பேசமுயன்ற போது அமைச்சர்;

நான் இவர் பேசுவதற்கு அனுமதிக்கமாட்டேன்; நான் கூறுவதை கவனிக்கும்படி அவரைக் கேட்கிறேன் என்றவர், 70 ஏக்கர் தென்னந்தோட்டத்தில் பெறப்பட்ட விளைச்சலைக் குறிப்பிட்டார்.

"1967-ம் ஆண்டு 473 தேங்காய்கள்; 1968-ம் ஆண்டு 489 தேங்காய்கள்; 1969-ம் ஆண்டு 439 தேங்காய்கள்; 1970-ம் ஆண்டு 429 தேங்காய்கள்; 1971-ம் ஆண்டு 490 தேங்காய்கள்" இப்படித் தெரிவித்த அமைச்சர், இந்த விபரங்களை ஏற்ற வருமானவரி உத்தியோகத்தவர்கள் பதவியிலிருந்து நீக்கப்படவேண்டும் என்றார்.

இவை அனைத்தையும் அமைச்சர் தெரிவித்தபோது சபையில் பலத்த கூச்சல்கள் எழுந்தன.

1971—72-ம் ஆண்டு மதிப்பீடுகளின் படியே நஷ்டஈடு பெறமுடியும் என காணி சீர்திருத்தச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கையில், திருமதி சிறிமாவோ 1976-ம் ஆண்டு டிசம்பர் 23-ந் திகதியே ஒப்பமிட்டிருக்கிறுர் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

"வெட்கம்! வெட்கம்!!" என்று பலர் அப்போது சத்தமிட்டனர்.

திரு. அனுரா பண்டாரநாயக்கா தொடர்பான மோசடி விபரங்களும் தம்மிடம் இருப்பதாகக் கூறி ஒரு பைலை அமைச்சர் திறந்த போது, சபாநாயகர் குறுக்கிட்டு, அவர் இச்சபையின் ஓர் அங்கத்தவராதலால் அந்த பைலின் விபரங்களை அமைச்சர் தெளிவிட முடியாது என்றார்.

இதனை ஏற்றுக்கொண்ட அமைச்சர், "பிறிதொரு தினத்துக்காக இதை விட்டுவைக்கிறேன்" என்று கூறி அந்த பைலை வைத்தார்.

காணிச் சீர்திருத்தச்சட்டம் நடைமுறைக்கு வந்ததிருந்து ஒரு வருடத்துக்கு முன்னர் ஒரு காணி விற்கப்பட்டிருந்தால் அது பெறுமதியற்றதாகும் என்று பொதுமக்களுக்கு கூறப்பட்டபோது திருமதி சிறிமாவோ 60 காணிகளை விற்றுர் என்று அமைச்சர் கூறியபோது திருமதி சிறிமாவோ எப்போது? என்று கேட்டார்.

திரு. சேனநாயக்கா: தயவு செய்து பேசாமலிருங்கள். காணிகளின் விற்பனை உறுதிகள் பெறுமதியற்றவை: இவற்றுக்கு என்ன தண்டனை?" என்று கேட்டார்.

"உயர்ந்த பதவிகளிலிருப்போரின் இத்தகைய சட்டத்தை மீறிய நடத்தைகளை மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள். இதற்கு அமெரிக்க மக்களே உலகுக்கு சிறந்த உதாரணமானுர்கள்; பல லட்சக்கணக்கான வாக்குகளால் தாம் தேர்ந்தெடுத்த திரு. நிக்ஸனை அவர்கள் தூக்கி வீசினுர்கள்" என்று அமைச்சர் கூறியபோது, எதுவுமே பேசாது நாடியில் கைகொடுத்தவண்ணம் குனிந்தபடியமர்ந்திருந்த திருமதி சிறிமாவோ, சற்று நிமிர்ந்து 'ஒருவிதமாக' சிரிக்கவும்; அமைச்சர் அவரைப் பார்த்து கடுமையான குரலில்—

"சிரிக்கவேண்டாம் திரு. நிக்ஸனுடன்கூட உங்களை ஒப்பிட முடியாது; தேர்தலில் வெற்றிபெறுவதற்காகவே அவர் அச்செயலில் ஈடுபட்டார். ஆனல் நீங்கள் உங்கள் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து பெரும் மோசடியில் ஈடுபட்டீர்கள்"—

அப்போதும் சபையில் பெரும் ஆரவாரம் ஏற்பட்டது

சபாநாயகர் அவர்களே, உங்களின் அனுமதியுடன் ஒரு ஜனதிபதி ஆணைக்குழுவை இவை பற்றி விசாரிக்க நியமிக்கும்படி நான் பிரதமரைக் கேட்கிறேன் என்று அமைச்சர் கூறிய போது திருமதி சிறிமாவோ "அதைத்தான் நானும் கோருகிறேன்" என்றார்.

"திருமதி பண்டாரநாயக்கா, அவரது குடும்பம்மீது மாத்திரமல்ல. இவற்ருேடு தொடர்புடைய வருமானவரி அதிகாரிகள்மீதும் கமிஷன் விசாரணை நடத்தவேண்டும். மனிதாபிமானமற்ற முறையில் பொதுமக்கள் தூக்கிலிடப்பட்டு-தண்டனை அனுபவித்த போது இந்தக் குடும்பம் இத்தகைய மோசடிகளில் ஈடுபட்டு சுகம் அனுபவித்துக்கொண்டிருந்தது" என்று கூறிய அமைச்சர்—

"சட்டம் எல்லோருக்கும் பொதுவானது. பிரதமரென்றுலென்ன சாதாரண பிச்சைக்காரனென்றுலென்ன, சட்டம் யாருக்கும் சமமே. எங்கள் பிரதமர் பிரதமராகப் பதவியேற்ற பின்னரும், முன்னர் இச்சபையில் இருந்த கோமாளி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தொடர்ந்த மான நஷ்ட வழக்கில் ஆஜராவதற்காக நீதிமன்றம் சென்றுர். பின்னர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவே அவ்வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டார்" என்றுர்.

"ஜனதிபதி ஆணைக்குழு, அமைச்சர்கள், உறுப்பினர்களின் அதிகார துஷ்பிரயோகம்பற்றியும் விசாரிக்கவேண்டும் என்றும், மேலும் ஏதாவது விபரங்கள் தேவைப்படின் அவற்றைத்தர தாம் தயார்" என்று கூறி, நன்றி சொல்லி அமர்ந்தார் அமைச்சர் சேனநாயக்கா.

பின்னர், திருமதி சிறிமாவோ பேச எழுந்ததும் அவர் பேச முடியாது என்றும், அமரும்படியும் பலத்த கூச்சல்கள் சபையின் இருபுறத்திலும் எழுந்தன. அப்போது சபாநாயகர்—

"இவ்விடயமாக இங்கு விவாதம் நடைபெறவில்லை" என்றுர் திருமதி சிறிமாவோவைப் பார்த்து.

திரு. சேனநாயக்கா, அவரைப் பேச தாம் அனுமதிக்க முடியாது என்றும் மிகப் பாரிய பொய்யை தன்மீது சுமத்தினுர் என்றும் சொன்னுர்.

திருமதி சிறிமாவோ: இச்சபை உறுப்பினர் ஒருவரின் பைலை இங்கு கொண்டுவந்து வாசித்தீர்; இது முறையற்ற செயல்.

திரு. சேனநாயக்கா: இது காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பைல்.

திருமதி சிறிமாவோ மீண்டும் பேச முயன்றபோது அவரைப் பேச விடாது சபையில் பெரும் கூச்சல் எழுந்தது.

அப்போது சபாநாயகர்: "தயவு செய்து அத்தனகலை உறுப்பினர் அமர்கிறீர்களா? இதில் விவாதிக்க நான் அனுமதிக்க முடியாது"-என்றுர்.

திருமதி சிறிமாவோ: சபாநாயகர் அவர்களே, நீங்கள் அவர் இவ்வளவும் கூற அனுமதித்தீர்கள்.

திரு. சேனநாயக்கா: பின்னர் நான், இன்னும் சிலவற்றை வெளிப்படுத்தநேரிடும்!

இவ்வாறு அமைச்சரும், அத்தனகலை உறுப்பினரும் நின்று வாக்குவாதப்பட்டுக் கொண்டிருக்க; அவற்றுக்கு மேலாக உறுப்பினர்களின் கூச்சல்களுக்கிடையில் சபை பெரும் அமளிப்பட்டிருந்த சமயம் சபைஅன்று ஒத்திவைக்கப்படவேண்டிய நேரத்தைக் கடந்துவிட்டமையால் சபாநாயகர்விஞவின்றியேசபையை ஒத்திவைத்தார்.

இத்துணை நேரமும் அமைச்சர்களும் சகல அரசாங்கக்கட்சி உறுப்பினர்களும் பெரும் ஆரவாரமாகவிருக்க பிரதமர் மட்டும் எவ்வித சலனமுமின்றி அமர்ந்திருந்தார். எதிர்க்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கமும், ஏனையதமிழர்விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களும் அநுதாபத்தோடு அமர்ந்திருக்கக்காணப்பட்டனர். திரு. மைத்திரிபாலா உட்படஏனைய சு. க. உறுப்பினர்களும் எதுவுமே பேசாதிருந்தனர். ஆரம்பத்தில் பல தடவைகளில் குறுக்கிட்டவண்ணம் ஆத்திரத்தோடு காணப்பட்ட திருமதி சிறிமாவோ பின்னர் எதுவுமே பேசாது இருந்தார்; இடையிடையே அருகிலிருந்த திரு. அமிர்தலிங்கத்துடன் பேசியதையும் திரு. அமிர்தலிங்கம் அநுதாபத்தோடு தலையை அசைத்துக் கொண்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

சபை ஒத்திவைக்கப்பட்டதும் "வெட்கம்! வெட்கம்!!" "கொள்ளைக்காரி இராஜினுமா செய்! சபையில் அமர அருகதையில்லை; சபையைவிட்டு வெளியேறு!"- என்பன போன்ற பல கோஷங்களை அரசாங்க உறுப்பினர்கள்சபைக்குள் எழுப்பிய வண்ணம் பல நிமிடங்களுக்கு சபையினுள்ளே நின்று கொண்டிருந்தனர். திரு. அமிர்தலிங்கம், திரு. சிவசிதம்பரம், திரு. சம்பந்தர், திரு. சூசைதாசன் ஆகியோர் திருமதி பண்டாரநாயக்காவைச் சூழ நின்றனர்.

கலரிகளில் திரண்டிருந்த பார்வையாளர்களும் அப்படியே நின்றுகொண்டிருந்தனர்.

அச்சமயம் சபை ஒத்திவைக்கப்பட்டதும் உள்ளே சென்ற பிரதமர் மீண்டும் சபைக்குள் வந்து உறுப்பினர்களைச்செல்லுமாறு கையினுல் சைகைகாட்டினுர்.

பின்னர், சபாநாயகர் வாசலுக்கு வந்து அங்கும் நின்ற உறுப்பினர்களுக்கு சைகையிட்டவண்ணம் சகலரும்வெளிபேறும்வரை நின்றுர்பிரதமர்.

அப்போது திரு. அமிர்தலிங்கமும் ஏனைய கூட்டணி உறுப்பினர்களும் திருமதி சிறிமாவோவை 'லோபி'யினுள் அழைத்துச் சென்றனர். பின்னர் சிறிது நேரம் கழித்து திருமதி சிறிமாவோ பேரவைக் கட்டிடத்தின் தென்புறவாயிலினூடாக வெளியேறிய சமயம் ஏராளமான பொலிசார் அங்கு நின்றுகொண்டிருந்தனர்!

## பிடிவிருந்தில் கைதானவர் ரூ.15,000 பிணையில்,சென்றுர்

(வண்ணுர்பண்ணை)

நீதிமன்றத்துக்குச் சமுகமளிக்கத் தவறியதால் பிடி விருந்து பிறப்பிக்கப்பட்ட உரும்பராயைச் சேர்ந்த சந்தேக நபரான எஸ். ஜயகுமார் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு 15,000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

மல்லாகம் நீதி மன்றத்தில் இவர் ஆஜர் செய்யப்பட்டபோது 15,000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

கடந்த வன்முறைச் சம்பவங்களின்போது காரைநகர் கடற்படையினரால் கொக்குவிலில் வைத்து ஆயுதங்களுடன் கைப்பற்றப்பட்டு யாழ்ப்பாணம் நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு அடையாள அணிவகுப்பின் பின்பு பிணையில் விடப்பட்ட 5 சந்தேக நபர்களில் இவரும் ஒருவராவார்.

இது தொடர்பான வழக்கில் கடந்த தவணையின்போது மல்லாகம் நீதிமன்றத்துக்கு இவர் சமுகமளிக்கத் தவறிய காரணத்தால் இவர்மீது பிடி விருந்து பிறப்பிக்கப்பட்டிருந்தது. சந்தேக நபர் ஜெயக்குமாரின் சார்பில் சட்டத்தரணி என். சிறிகாந்தா ஆஜராகியிருந்தார்.

## நாவலர் விழா கொண்டாடினர்

[யாழ்ப்பாணம்]

வண்ணை நகரத்தார்கதிர் வேலாயுதசுவாமிகோவில் மண்டபத்தில் நாவலர் தர்ம பாதுகாப்புச்சபை ஆதரவில்சட்டத்தரணி த. சோமசுந்தரம் தலைமையில் நாவலர் தின விழா கொண்டாடப்பட்டது.

பிரம்மஸ்ரீ கு. பாலசுப்பிரமணியக்குருக்கள், பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, திரு. சி. சிவரத்தினம் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர். (அ)

சுசி

∴ கலண்டர்கள்
∴ டயறிகள்
∴ பிளாஸ்டிக் டயறிகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்

வடபகுதி விநியோகஸ்தர்கள்
S. P. சாமி அன் கொம்பனி
193, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜி - சரோஜாதேவி
குலமகள் ராதை

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30.
சிவாஜி-சாவித்திரி
பந்தபாசம்

ராணி [யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2.30, 6·00, 9.30.
முத்துராமன்-விஜயா, நாகேஷ் நடித்த
கஸ்தூரி விஜயம்
(புதிய பிரதி)

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
10-30, 2-30, 6-30, 9-45
முத்துராமன், சுந்தரராஜன், கே. ஆர். விஜயா நடித்த
கே. பாலசந்தரின் இன்றுமட்டும்
நாணல் [புதிய பிரதி]
நாளை முதல் ஸ்ரீதரின்
தேன்நிலவு

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
தெய்வ மகன்

லிடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ்.நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர். சரோஜாதேவி நடித்த
தாயைக் காத்த தனயன்
(புதிய பிரதி)

Regal (Jaffna)
"KRAKATOA" IS A STUNNER!
A Grand Adventure spectacle designed to knock you out.
It is Sensational. An artistic and technical triumph.
Adults may find themselves biting their nails.
Now running to packed houses in its
2nd Week 70 M. M
"Krakatoa East of Java"
Cinerama wide screen! [Techni color]
Daily at 4-15 7-00 & 9-30 P. M. only
Sat, Sundays 10-30, A.M. 1-30 4-15 7-00 & 9-30 P.m.

10-வது ஜனத்திரள் வாரம்!
ராஜா யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
ஜெமினி, ஜெயசித்திரா நடித்த
தசாவதாரம்
பாடசாலை மாணவர்கள் ஆசனங்களை பதிவுசெய்து கொள்ளவும்.

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி- ஜெமினி - லக்ஷ்மி - நிர்மலா
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடியது
★ கமலஹாசன் ரஜனிகாந்த்
★ எம். எஸ். விஸ்வநாத்
★ ஸ்ரீதேவி ★ ஒய். விஜயா
R. M. S. புரொடக்ஷன்ஸ் அளிக்கும்
மூன்று முடிச்சு
திரைக்கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்


## பொலநறுவ பொலிஸ்நிலைய கொலைவழக்கு

# இரண்டு எதிரிகளுக்கு 8 வருட சிறை; ஒருவர் விடுதலை; ஒருவருக்கு 4 வருடம்

(குருநாகல்)

பொலநறுவ பொலிஸ்நிலைய கொலைவழக்கில் முதலாம் இரண்டாம் எதிரிகளுக்கு தலா எட்டு வருட கடூழியச்சிறைத் தண்டனையும் மூன்றும் எதிரிக்கு நான்கு வருட கடூழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. நான்காம் எதிரி விடுதலைசெய்யப்பட்டார்.

இவ் வழக்கு குருநாகல் மேல்நீதிமன்றத்தில் நீதிபதி அபயவர்த்தன முன்னிலையில் நடைபெற்றது.

இவ் வழக்கில் 76ம் ஆண்டு மே மாதம் 11-ம் தேதி டொன்மாட்டின் றணசிங்கா என்பவரை கொலைசெய்ததாக பொலநறுவ சப்இன்ஸ்பெக்டர் ராஜபக்சா சார்ஜண்ட் கிரிபண்டா, கான்ஸ்டபிள் கே. ஏ. பந்துசேன, ஜீப் சாரதி கருணதிலகா ஆகியோர் மீது குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) சட்டத்தரணிகளான தயாபெரேரா, திலங்காவிக்கிரமசிங்கா, டென்சில் குணவர்த்தன, ஜி. பி. சேனநாயக்கா ஆகியோர் ஆஜரானார்கள். அரசதரப்பில் பிரதி பகிரங்க வழக்குதொடுநர் திரு. சிவராசா ஆஜரானார்.

தொகுப்புரையின் போது 4-ம் எதிரி மீது குற்றச்சாட்டு இல்லையென ஜூரி சபையினர் தெரிவித்ததைத் தொடர்ந்து அவர் விடுதலைசெய்யப்பட்டார்.

முதலாம் இரண்டாம் மூன்றும் எதிரிகள், கைமோசக் கொலைக்குற்றவாளிகள் என ஜூரிசபையினர் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதிபதி தீர்ப்புவழங்கினர்.

## குறிஞ்சிக் குமரன் கும்பாபிஷேகம்

(பேராதனை)

இலங்கைப் பல்கலைக்கழக பேராதனை வளாக குறிஞ்சிக் குமரன் கோயில் புனராவர்த்தன கும்பாபிஷேகம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை நடைபெறவுள்ளது. புனராவர்த்தன பணிகளை, இலங்கைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம், வர்த்தகப் பிரமுகர்களின் உதவியுடன் நிறைவேற்றியுள்ளது.

கடந்த இனக்கலவரத்தின் போது இந்த முருகன் ஆலயம் சேதப்படுத்தப்பட்டது தெரிந்ததே. [இ]

## மாவட்ட...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் தவிர்ந்த ஏனைய சில விடயங்களில் அதிகாரம் செலுத்தினாலும் தமது வரம்புக்கு அப்பால் செயல்பட்டார்.

திருநெல்வேலியில் சிங்கள குடியேற்றத்தை நடத்த முன்னாள் விவசாய அமைச்சரின் பணிப்புரைமீது முன்னாள் அரசாங்க அதிபர் முயற்சித்தபோது, பலத்த முயற்சியின்பின், தனிப்பட்ட முயற்சியின்பின், சிங்களக் குடியேற்றத்தை தடுத்து நிறுத்தி அக்காணியை நல்லூர்த்தொகுதி இளைஞர்களுக்கு வழங்க வழிசெய்தார்.

புதிய மாவட்ட மந்திரிக்கு சட்டரீதியாக இவ்வதிகாரம் கிடைக்குமாதலால், அவர் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, தமிழ்ப்பிரதேசங்களான வவுனியா, மன்னார், திருமலை, மட்டக்களப்பு ஆகிய தொகுதிகளிலும் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தை தடுத்து நிறுத்த முடியும்.

பொருளாதார ரீதியில் அமைச்சர்கள் நேரடியாக தமக்குத்தேவையான வகையில் பெரும்பான்மை இனத்திற்கு சாதகமாக பொருளாதார ரீதியிலோ, நியமன ரீதியிலோ தொழிற்சாலைகள் அமைத்தல் போன்ற கைங்கரியங்களில் செயல்பட்டுவந்தால் மாவட்ட மந்திரி அதைத் தடுத்து நிறுத்தலாம்.

எனவே மாவட்டமந்திரி, சட்டரீதியான அதிகாரங்களை உள்ளடக்கியதாக இருந்தால் அதனை ஏற்றுக்கொள்ளலாம்.


றியோ [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்., நம்பியார்
ஜெயலலிதா-நாகேஷ் நடித்த
அன்னமிட்டகை
[புதிய பிரதி]

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி பி.ப. 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம். ஜி. ஆர்- லதா
உழைக்கும் கரங்கள்


## யாழ். மாநகரசபை தேர்தல்:

# காங்கிரஸ் வாலிப முன்னணி போட்டியிட முடிவு

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணம்மாநகராட்சிமன்ற தேர்தல் உட்பட, சகல உள்ளூராட்சிமன்ற தேர்தல்களிலும் தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணி போட்டியிடுவதென நேற்றையதினம் வண்ணார்பண்ணையில் கூடிய தமிழ்க்காங்கிரஸ் வாலிமுன்னணி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இக்கூட்டம் சட்டத்தரணியும் தமிழ்க்காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவருமான திரு. குமார் பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது.

மற்றொரு தீர்மானமாக, அடுத்த ஆண்டு மாசிமாதத்தில் வரும் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் சிரார்த்த தினத்தை யாழ்ப்பாணத்தில் சிறப்பாக கொண்டாடுவதெனவும், இதனையொட்டி சமயவழிபாடுகளும் சிறப்புப் பொதுக்கூட்டமும் நடாத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

திருத்தப்படவிருக்கும் அரசியல் சாஸனத்துக்கு, கல்விமான்கள் அரசியல் தீர்க்கதரிசிகள், பொதுப்பணி பிரமுகர்கள், சமயப்பிரமுகர்கள் அனைவரையும்கொண்ட திருத்தக் குழுவை ஸ்தாபித்து அதன்மூலம் திருத்தங்களை தெரிவுக்குழுவுக்கு அனுப்புவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகராட்சிமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை தெரிவுசெய்வதற்கான குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. (கெ)

## ரூ. 28 கோடி 80 லட்சம்

### கனடா அபிவிருத்தி உதவி

(கொழும்பு)

கனடா, இலங்கைக்கு நடப்பு ஆண்டில் 28 கோடி 80 லட்சம் ரூபாவையும் அபிவிருத்தி உதவியாக வழங்கும்.

இத்தகவலை காணி, விவசாய அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா இன்று தெரிவித்தார்.

கனடா அரசு இலங்கைக்கு 3 மோட்டார் வாகனங்களை வழங்கியது தொடர்பாக நேற்று கொழும்பு கனடா தூதரக அலுவலகத்தில் நடைபெற்ற வைபவத்தில் பேசுகையிலேயே திரு. சேனநாயக்கா மேற்கண்டவாறு கூறினர். (இ)

...

## வருடாந்த மாநாடு

[வவுனியா]

அகில இலங்கை ஆள்புல வேலைப்பகுதி பொறியியல் தொழிற்சங்க வருடாந்த மகாநாடு இம்மாதம் 17-ந் திகதி வவுனியாவில் உள்ள தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இம்மகாநாட்டில் ஊழியர்களின் எதிர்கால பிரச்னைகள் பற்றி ஆராயப்படுமென மேற்படி தொழிற்சங்க செயலாளர் செ. விஜயரட்னம் சகலதொழிலாளர்களுக்கும் கடிதங்கள் மூலம் அறிவித்துள்ளார்.

அகில இலங்கை ரீதியாகப் பிரதிநிதிகள் கலந்து கொள்வர் எனத்தெரிவிக்கப்பட்டது.

[நெல். நி உ]

## மாணவரின் கண்காட்சி

[யாழ்ப்பாணம்]

அச்சுவேலி புனித தெரேசா மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆரம்பபிரிவு மாணவர்களின் கைத்திறனைச் சித்தரிக்கும் கண்காட்சியை கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ. தங்கராசா திறந்துவைத்தார்.

அவர் அவ் வைபவத்தில் பேசுகையில் இப் பாடசாலை மாணவரின் கைத்திறனும், ஆக்கமுயற்சியும், கலைநுணுக்கமும் கண்காட்சிக்கு வைத்திருக்கும் பொருட்களில் பிரதிபலிக்கிறது என்றும் அவர்களது ஆக்கமும் ஊக்கமும் ஏனைய பாடசாலைக்கு ஓர் எடுத்துக்காட்டு என்றும் பாராட்டிப் பேசினர். மாணவர்களுக்கு ஊக்கமளித்த வித்தியாலய அதிபர் சங்கைக்குரியசகோதரி ஸ்ரெலா மேரியையும் ஏனைய ஆசிரியர்களையும் திரு. தங்கராசா பாராட்டினர். [இ]

## இன்று

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு மகளிர் மகாவித்தியாலயக் கலாமன்றத்தின் வருடாந்தக் கலைவிழா இன்றிரவு நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பிரதம அதிதியாக வட்டுக்கோட்டை தேசியஅரசுப்பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசு கலந்துகொள்வார். வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வியதிகாரி திரு. ப. சண்முகராசா, பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் திரு. கா. சோமசுந்தரம் ஆகியோரும் விழாவில் உரையாற்றுவார்கள்.

## வடபகுதி

[6-ம் பக்கத்தொடர்சி]

படவேண்டும் என்றும், அப்பொழுதுதான் எந்தக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் ஊழியர்களுக்கு நன்மை கிடைக்கும் என்றும் கூறினர்.

இதன்பின் 'கூட்டுறவு பணியாளர் சங்கம்' என்ற பெயரை சூட்டவேண்டும் என்ற பிரேரணையை சபையில் வாக்குக்கு விட்டபோது ஒருவர் கூட அதனை ஆதரித்து வாக்களிக்கவில்லை. இதன்பின் மற்றும் பெயர்களும், நிராகரிக்கப்பட்டு, 'கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்' என்ற பெயர் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன்பின் புதிய சங்கத்தின் சட்டதிட்டங்கள் அங்கிகரிக்கப்பட்டன. [க-இ]

**மணிவாக்கு**

அறிவாளியின் கையிலுள்ள மையின் கறை, தியாகியின் இரத்தக் கறையைவிடப் புனிதமானது. —முகமதுநபி

ஈழநாடு
The Eelanaadu

## துறைமுக அபிவிருத்தி

காங்கேசன்துறைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவேண்டியதன் அவசியத்தை தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர்களில் ஒருவரும், எதிர்க்கட்சித்தலைவரும் காங்கேசன்துறைப் பிரதிநிதியுமான திரு. அ. அமிர்தலிங்கம் தேசியஅரசுப் பேரவையில் எடுத்துக் கூறியிருக்கிறார்.

உலகிலேயே சிறந்த இயற்கைத் துறைமுகங்களில் ஒன்றான திருக்கோணமலைத் துறைமுகத்தில் கப்பல்களிலிருந்து பொருள்களை நேரடியாகவே இறக்கவும் ஏற்றவும் கூடிய கரையோர இறங்குதுறைகளை அமைக்க வேண்டுமென்று திருக்கோணமலைப்பிரதிநிதி திரு. இரா. சம்பந்தனும் பேரவையில் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

வரவு-செலவுத் திட்டக்குழு நிலை விவாதத்தில்பேசுகையிலேயே இந்தக் கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருக்கின்றன.

காங்கேசன்துறைத் துறைமுகத்தைஅபிவிருத்திசெய்ய வேண்டுமென்பது நீண்டகாலக்கோரிக்கை.

அமரர் திரு. டட்லி சேனநாயகா பிரதமராக இருந்தபோது இத்துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்காக அத்திவாரக்கல் நாட்டினார்.

இதன்பின் ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி - லங்காசமசமாஜக்கட்சி கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவைகளின் ஐக்கியமுன்னணி ஆட்சிபீடத்துக்குவந்தது.

அச்சமயம் யாழ்ப்பாணத்துக்கு வந்த வீடமைப்புக் கட்டடநிர்மாண அமைச்சர் திரு. பீட்டர்கெனமன் காங்கேசன்துறைத் துறைமுகம் அபிவிருத்திசெய்யப்படுமென யாழ். முற்றவெளி மைதானத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் அறிவித்திருந்தார்.

ஆயினும் இதுவரை இத்துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இந்தியாவில் சேது சமுத்திரத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம்நிறைவேறியதும் கொழும்புத் துறைமுகத்துக்குக் கப்பல்கள் வருவது வெகுவாகக் குறைந்துவிடும்.

காங்கேசன்துறைத் துறைமுகத்தை விருத்திசெய்தால்தான் வெளிநாட்டுக் கப்பல்கள் இலங்கைக்குவந்துபோவதற்கு வாய்ப்புக்கிடைக்கும்.

இதுதவிர போக்குவரத்துச்சேவையும் வீதிகளின் சீர்கேடுகளுமே நாட்டில் விலைவாசி உயர்வதற்குப் பெரிதும்காரணமாகஅமைந்துள்ளன

காங்கேசன்துறைத் துறைமுகம் மட்டுமல்ல காலி, மட்டக்களப்பு, மற்றும் பல துறைமுகங்களையும் அபிவிருத்தி செய்தால் உணவு மற்றும் பொருள்களின் ஏற்றுமதி இறக்குமதிக்கு அதிகவசதி கிடைக்கும். இதன்மூலம் வாழ்க்கைச் செலவு குறைவதற்கு வாய்ப்பேற்படலாம்.

வேறு என்ன காரணங்களுக்காக காங்கேசன்துறை துறைமுகம் இதுவரை அபிவிருத்தி செய்யப்படாதிருந்தாலும் இனியும் இதைத் தாமதிப்பது நல்லதல்ல.

மாவட்டஅமைச்சர்களின் அதிகாரங்கள் பற்றிய விபரம் இன்னும் சரியாகத் தெரியவில்லை மாவட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு அதிகாரம் இருக்குமானால் அவற்றைத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஏற்பதன் மூலம் இத்துறைமுகங்களையும் அபிவிருத்தி செய்யமுயற்சிசெய்யலாமல்லவா?

# 'தமிழரை படைபலத்தினால் ஆள நினைக்கிறது அரசு'

## மனித உரிமைக்கு இதுமாறு என்கிறார் கோப்பாய் எம். பி.

(யாழ்ப்பாணம்)

'தமிழ் மக்களின் பூரணசம்மதமின்றி, சிங்கள மக்களின் இறைமையைப் பேணுவதற்காக உருவாக்கப்பட்ட அரசியல் சாஸனத்தைக் கொண்டு தமிழ் மக்களை அரசின் படைப் பலத்தால் ஆளநினைக்கிறது அரசு. இது ஐ.நா. சபையின் மனித உரிமைகளுக்கு முற்றிலும் மாறுபட்டதாகும்'

யாழ்-றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற மனித உரிமைகள் தினவைபவத்தில் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப் பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

இக்கூட்டம், முன்னாள்செனட்டர் திரு. சு. நடராஜா தலைமையில் நடைபெற்றது. திரு. எஸ். கதிரவேலுபிள்ளை தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: 'தமிழ் ஈழம் என்று நாம் சிந்தித்துக் கொண்டிருப்பது, தமிழ் ஈழத்தின் சமுதாயம் ஒருமுகப்படுத்தப்பட்ட சமுதாயமாக இணைப்பாட்சி முறைக்கு வழிவகுத்து மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் சுயநிர்ணய உரிமை கொண்ட சமுதாய அமைப்பாக விளங்கும்.

'இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழ் தேசிய இனத்தின் மனித உரிமைகள் மறுக்கப்படுவது மட்டுமல்ல சதிக்குற்றச் சாட்டில் ஈடுபட்ட சிங்கள வாலிபர்களை, சிறையில் வைத்துக் கொடுமைப்படுத்தினர்களே, இதுவெல்லாம் மனித உரிமைகளை மறுப்பதற்கு உதாரணங்களாகும்.

இரு தேசிய இனங்கள் தமது இறைமையைப் பேணி, இரு நாடுகளாக ஆட்சிபுரிந்த இலங்கையின் நிர்வாகத்தை பொருளாதார வசதிக்காக ஆங்கிலேயர்கள் ஒன்றிணைத்தார்கள். ஆனால் இந்த நாட்டின் சுதந்திரம் எந்தவித இரத்தப்புரட்சியுமின்றி, கிடைத்தது. ஆனால் இந்த நாட்டு மக்களுக்கு ஓர் அரசியல் சட்டத்தை உருவாக்கும் போது தமிழர்கள் பங்குகொள்ளவில்லை. ஆனால் அவர்கள் முன்னைய நடைமுறைகளில் இருந்து அவர்களது அடிப்படை உரிமைகளைவழிவகுத்தார்கள். ஆனால் இன்று மனித உரிமைகளுக்கு முற்றிலும் மாறுபட்ட விதத்தில் மதம், மொழி, இனம், ஆகியவற்றுக்கு தனிப்பட்ட முறையில் மதிப்பளித்து செயல்படுகின்றார்கள்.

திரு. நடராஜா தமது தலைமையுரையில் கூறியதாவது:

இன்றைய அரசு பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள உள்ளூராட்சிமன்ற சட்டவிதிகளில் கட்சியமைப்பு முறையையே அமுல் செய்துள்ளது. இதுகாலவதியில் நாடாளுமன்றத் தேர்தல்களிலும், திருத்தம் செய்யப்படலாம், என பிரதமர் ஜே ஆர். ஜயவர்த்தனா கூறியுள்ளார். இதுகட்சி ஊழல்களுக்கு வழிவகுக்கும்.

'இன்றைய அரசு தர்மிக அரசென புகழ்கின்றார்கள். ஆனால் தமிழர்களது அடிப்படை உரிமைகளை வழங்குவதற்கு தயக்கம் காட்டுகின்றார்கள். இதனால் தமிழர்கள் தனிநாட்டுக் கொள்கைக்கு நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

முன்னைநாள் பேராசிரியர், திரு. நேசையா பேசுகையில், விடுதலையடைந்த நாடுகளின் மக்களுக்கு மனித உரிமைக்காக விடுதலை பெற்றுக் கொடுக்க வழிவகுத்தவர் காந்தியடிகள் என்றார். (கெ)

## இரசுவுடன்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றுவதாக தமிழ் ஈழத்திலிருந்து, கிழக்கு மாகாணம் தனியாக செல்வதற்கு அரசு செய்யும், சதிவேலைகளுக்கு உடந்தையாக இருக்கமாட்டேன் என அண்ணன் இராசதுரை அறிவிக்கவேண்டும்.

'இந்த மூன்று அம்சங்களையும் கொண்ட அறிக்கையை அவர் வெளியிட்டால். அவருடன் சேர்ந்து ஒத்துழைக்கத்தயார். பழையவைகளையெல்லாம் மறந்து ஒத்துழைப்பேன்'' என்று கவிஞர் காசி ஆனந்தன் கூறினார்.

மட்டக்களப்பில் கூட்டணி இரு பிரிவாக இயங்குவதால், உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடுவதுபற்றி இன்னும் ஆலோசிக்கப்படவில்லையென்றும், கூட்டணித் தலைமைப்பீடமே, இதுபற்றி முடிவுசெய்யவேண்டுமென்றும் கவிஞர் காசி ஆனந்தன் கூறினார். (க)

## வடபகுதி கூட்டுறவு—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

### பல பெயர்கள்

புதியசங்கத்திற்கு கூட்டுறவு பணியாளர் சங்கம், தமிழ் ஈழ கூட்டுறவு பணியாளர் சங்கம், கூட்டுறவு ஊழியர் சங்கம், புரட்சிகர தமிழ் கூட்டுறவு ஊழியர்சங்கம் என்ற பெயர்கள் சமர்ப்பிக்கப்பட்டன. இவற்றில் 'கூட்டுறவு ஊழியர் சங்கம்' என்றபெயர் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அகில இலங்கை கூட்டுறவு ஊழியர்சம்மேளனத்திலிருந்து பிரிந்து செல்லக் கூடாதென்று ஒரு பகுதி உறுப்பினர்கள் வலியுறுத்திப்பேசினார்கள்.

### பிரிந்து செல்வதால் பயனில்லை

யாழ் நகர கிளைச்செயலாளரான திரு. த. லட்சியபூபதி பேசும்போது, பிரிந்து செல்வதால் எவ்விதபயனும்ஏற்படப் போவதில்லையென்றும், தமிழ் தலைவர்களே இன்று அரசுடன் சேர்ந்து செயலாற்றுவதாகவும், அதேபோல் தொழிலாளர்களும் ஒன்றுசேர்ந்து செயலாற்றவேண்டும் எனக்கூறினார்.

### அரசியல் பேசவேண்டாம் என கூச்சல்

தமிழ்தலைவர்கள் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை மறந்து, வர்த்தக மந்திரிக்கு வரவேற்பு அளிக்கும் போது ஊழியர்கள் ஏன் பிரியவேண்டும் என திரு. லட்சியபூபதி கூறிய போது, சபையின் பின்பகுதியிலிருந்து 'அரசியல் பேச வேண்டாம்' என்ற கூச்சல் கிளம்பியது. அதைத் தொடர்ந்து சிலர் மேடையை நோக்கிச் சென்றனர்.

தொடர்ந்து பேசிக்கொண்டிருந்த திரு. லட்சியபூபதியின் கையிலிருந்த மைக்கை' வட பிராந்திய செயலாளர் திரு. ராஜேந்திரம் இழுத்து அவரை பேசவிடாமல் தடுத்தபோது பேச்சுரிமையைப் பறிக்காதீர்கள் இது ஜனநாயகமல்லஎனச் சபையினர் கோஷமெழுப்பினர்.

திரு. லட்சியபூபதி, மேடை விளிம்பில் வந்துநின்று மைக் இல்லாமல்பேசும்போது 'தாய்ச் சங்கத்திலிருந்து நீங்கள் பிரிந்தால், யாழ்ப்பாணம் மாநகர கூட்டுறவு ஊழியர் 500 பேர் பிரிந்து புதிய சங்கம் அமைப்போம்' என்று கூறினார். இதே சமயம், மைக்கில் தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் கட்டுப்பாடாக இருந்து அமைதியை கடைப்பிடியுங்கள் என்றார்.

### கூச்சலும் குழப்பமும்

எங்கும் ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தது சில பெண் ஊழியர்கள் மண்டபத்தை விட்டு வெளியேறிச் சென்றனர்.

சபையின் கூச்சல் உச்சக்கட்டத்தை அடைந்தபோது ஒரு சந்தர்ப்பத்தில், தலைவர் திரு திருச்சிற்றம்பலம், இப்படியான கட்டுப்பாடில்லாத கூட்டத்திற்கு நான் தலைமைதாங்க விரும்பவில்லை ராஜினாமாசெய்கிறேன்' என்று கூறியபோது, மேடையிலிருந்த மற்றவர்கள் அவரைச் சமாதானபடுத்தி அதனை வாபஸ் பெறச்செய்தனர்.

ஒருகட்டத்தில் திரு. லட்சியபூபதியும், மற்றும் ஒரு பகுதி ஊழியரும் வெளிநடப்புச் செய்ய முயன்றபோது திரு சம்பந்தனும், ஈழத்து சிவானந்தனும், அவர்களை அழைத்த சமாதான பேச்சு நடத்தினர் இதன் பயனாக திரு லட்சியபூபதி மீண்டும் மேடைக்கு சென்று பிரிந்துசெல்வதை தான் ஆதரிப்பதாகவும் ஆனால் பாராளுமன்ற அரசியல் நடத்தாத திரு பாலா தம்புவின் சங்கத்துடன் இணைந்து செயல்

(5-ம் பக்கம் பார்க்க

## யாழ்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

### உபதபால் அதிபர்களுக்கு...

இந்நிலையில 2075 உபதபால் கந்தோர்களிலும் கடமைபுரியும் தபால் அதிபர்களுக்கு பென்ஷன் வழங்கப்படுவதில்லை இவர்களுக்கு சேவைக்கால அடிப்படையில் நிவாரணம் வழங்க அரசு முன்வரவேண்டும் [ம-இ]

## நாடும் நடப்பும்

சமீபத்திய இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி வழங்குவதில் பெரும் தில்லுமுல்லுகள் நடைபெறுவதாகப் பலருங்கதை கதையாகச் சொல்லுகிறார்கள்.

உண்மையாகக் கலவரத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவி கிடைக்கவில்லையென்றும் சிலருடைய அனுசரணையுடன் பாதிக்கப்படாதவர்கள் பலர் கூலையாகப்பணத்தைப் பெற்றுச் செல்கிறார்களென்றும் சொல்லிக்கொள்ளப்படுகிறது.

சிலர் திடீரெனத் தோன்றி எப்படியோ உருட்டி மிரட்டிப் பணம் பெற்று விடுகிறார்களாம்.

பாதிக்கப்படாதவர்கள் பலரும் பணம் பெற்று விட்ட பின்னர் உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்கள் நிவாரணம் பெறுவதற்குச் சென்றபோது புதிய சட்ட திட்டங்கள் பற்றிக் கூறப்படுகின்றதாம்.

ஒரு சிறுகாயம்கூடப் படாதவர்கள் பலர் நிவாரண நிதி பெற்றிருக்கையில் உயிரிழந்த உழைப்பாளிகளின் குடும்பங்களுக்கு இன்னும் ஒரு சதம் கூடக் கிடைக்கவில்லையென்றும் கூறப்படுகிறது.

பாதிக்கப்பட்டவர்கள் என்று நிவாரண உதவி கோரிச் சென்றவர்களிடம் அவர் வசித்த பகுதிக் கிராம சேவகர் அல்லது உதவி அரசாங்க அதிபரிடமிருந்து கடிதம் கொண்டு வரும்படி இப்போது கூறப்படுகிறதாம். அவர்களிடம் கடிதம்பெற முடியுமாயிருந்தால் முன்னர் அவர்களே தங்களைப் பார்துகாத்திருப்பார்களே என்று இவர்கள் கவலையோடு தெரிவித்தார்களாம்!

எங்கும் எதிலும் ஊழலும் மோசடியுமென்றால் எவர்தான் என்ன செய்யமுடியும்!

பி. பி. ஸி. சங்கர் இங்கு வந்திருந்த போது கூறியது போல் மனிதனின் உடலில் 'ஷவட் கோர்ப்பசெல்' என்று இரத்தத்திலிருப்பது போன்று ஊழல் கோர்ப்பசெல்லும் இரத்தத்துடன் ஊறியிருக்கிறது போலும்!

இதையார்தான் என்ன செய்ய முடியும்!

0 0 0

எஸ். ரி. ஆர். பிலிம்சின் அதிபர் திரு எஸ். தியாகராஜா எடுத்துள்ள அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் இறுதியாத்திரைத் திரைப்படம் தணிக்கைக்குப் போய் திரும்பிவந்து விட்டதாம். விரைவில் எஸ். ரி. ஆரின் திரைகளில் இதைப் பார்க்கலாம்!

0 0 0

கடந்த வருடம் ஜி. சி. ஈ. (சாதாரணம்) பரீட்சையில் இரண்டு திறமைச் சித்தியுடன் 7 பாடங்களில் சித்தி அடைந்த சரவணை மேற்கைச் சேர்ந்த எஸ். செல்லத்தம்பி என்ற மாணவர் தமது விவசாய விஞ்ஞான பாடத்தின்விடைத்தாளை மீளாய்வு செய்ய விரும்பி உரிய கட்டணத்துடன் பரீட்சை ஆணையாளருக்கு விண்ணப்பித்திருந்தாராம்.

விவசாயப் பாடத்தில் சாதாரண சித்தி அடைந்த இவர் இப்பாடத்தில் திறமைச் சித்தி கிடைத்தால் தான் ஜி சி ஈ. உயர் வகுப்பில் கல்வி கற்கலாம் என்ற நோக்குடனேயே மீளாய்வுக்கு விண்ணப்பித்திருந்தாராம்.

ஆனால் இவருக்கு பரீட்சை ஆணையாளரிடமிருந்து வந்த பதில் ஏமாற்றத்தையே அளித்தது:

உமது விடைத் தாள்களை தேடி எடுக்க முடியாமல் போய் விட்டது. முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுக்கப்படும், இப்பாடத்திற்கு நீர் இவ்வருடம் நடைபெறும் ஜி சி ஈ. (சாதாரணம்)

4ம் கலம் பார்க்க

[5ம் கலத் தொடர்ச்சி)

பரீட்சையில் தோற்றவிருப்பினால் அதற்கு விசேட ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்று ஆணையாளர் பதில் அளித்துள்ளாராம்.

எப்படி நமது திணைக்களங்களின் சாதனைகள்?

- ஊர்சுற்றி

இப்பத்திரிகை 'ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as News paper in Sri lanka.